# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 108/மா/2025
நாள்: 29.05.2026

கோ. கோவிந்தராஜ்
சென்னை–83 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–9
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 20.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.01.2025 அன்று பெறப்பட்டு 108/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 20.01.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முகவரியிட்ட 05.12.2024 நாளிட்ட மனுவின் நகலில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சமூக செயற்பாட்டாளர். பொது மக்களுக்கான பொது பணிகளை சட்டரீதியாக நீதிமன்றம் வரை சென்று செய்து வருவதற்கான சான்றுகள் ஏராளமாக உள்ளது. சென்னை.94 சூளைமேட்டில் வேலை செய்து வருகிறேன். தினமும் பஜனை கோயில் 2–வது தெரு வழியாக சென்று வருவது வழக்கம். கடந்த ஆண்டு பஜனை கோயில் 2–வது தெருவில் சுமார் 15,000/– சதுரடி கொண்ட கட்டிடத்தை இடித்து தளம் ஒன்றுக்கு 15,000/– சதுரடி என 4 தளத்தில் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு பணிமுடியும் தருவாயில் உள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இக்கட்டிடம் முன் பொதுசாலையை ஆக்கிரமித்து Concrete தூண் Roof, E.B.Box-கள் கடந்த மாதம் அமைக்கப்பட்டது. இன்று 04.12.2024 அங்கு பார்க்கையில் EB Transform பொருத்தப்பட்டு இணைப்புகள் வழங்க தயாராக உள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இதுபோல் ஆக்கிரமித்து E.B. Transform அமைத்ததால் அருகில் உள்ள பள்ளியில் படிக்கும் குழந்தைகள் மற்றும் பாதசாரிகள் நடுசாலையில் நடந்து விபத்துகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. மேலும் E.B.Transform சாலையில் உள்ளதால் பாதசாரிகள் மீது மின்சாரம் தாக்கி உயிர் பலிகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. மேலும் தண்ணீர் லாரிகள் அடிக்கடி இத்தெருவில் செல்லும். சாலையில் நீட்டி கொண்டிருக்கும் Roof மற்றும் Transform மீது இடித்து விபத்துக்கள் நேரிட அதிக வாய்ப்புகள் உள்ளது. தனியார் கட்டிடத்திற்குள் EB

Transformer-ரை அமைக்காமல் EB அதிகாரிகள் கையூட்டு பெற்றுக் கொண்டு இதுபோல் Transformer–கள் அமைத்து வருகிறார்கள். மாநகராட்சியில் முறையாக அனுமதி பெறுவதில்லை. வரும் காலங்களில் EB அதிகாரிகள் இணைப்பு வழங்கினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர நேரிடும். ஆகவே, இம்மனுவை கண்டவுடன் புகைப்பட ஆதாரங்களுடன் ஆக்கிரமிப்பை அகற்றி பதில் அளிக்கவும். செ.மா. இக்கட்டிடத்திற்கு வழங்கிய NOCC வரைபடம் அளிக்கவும்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 08.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.05.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி ஆணையர் தனது 14.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

''பஜனைக் கோவில் 2–வது தெரு, சூளைமேடு, சென்னை–94–ல் புதியதாக அமைக்கப்பட்ட மின்சார ட்ரான்ஸ்பார்மர் குறித்து கள ஆய்வு செய்யப்பட்டது. கள ஆய்வில் குடியிருப்பு வாசிகள் ஏற்கனவே இருந்த பழைய மின்சார ட்ரான்ஸ்பார்மரை அகற்றிவிட்டு புதியதாக அமைக்கப்பட்டது என அறியப்பட்டது. இதுகுறித்து தமிழ்நாடு மின்சார வாரியமிடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எந்த தகவலும் பெறப்படவில்லை. மேலும் புகார்தாரர் கடிதம் மீது மேல்நடவடிக்கைக்கு 08.02.2025 அன்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடிதம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள மின்சார ட்ரான்ஸ்பார்மர் அகற்றும்பணி தமிழ்நாடு மின்சார வாரியத்தினை சார்ந்த பணியாகும் என இதன் மூலம் தங்களின் மேலான பார்வைக்கு தெரிவிக்கப்படுகிறது.

எனவே மாண்பை தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்கண்ட இப்பதிலினை ஏற்றுக்கொள்ளுமாறு தங்களின் பணிந்து கேட்டுக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் 15.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சென்னை.94 சூளைமேட்டில் வேலை செய்து வருகிறேன். தினமும் பஜனை கோயில் 2–வது தெரு வழியாக சென்று வருவது வழக்கம். கடந்த ஆண்டு பஜனை கோயில் 2–வது தெருவில் சுமார் 15,000 சதுரடி கொண்ட கட்டிடத்தை இடித்து தளம் ஒன்றுக்கு 15,000 சதுரடி என 4 தளத்தில் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டது. பணிமுடியும் தருவாயில் இக்கட்டிடம் முன் பொதுசாலையை ஆக்கிரமித்து Concret தூண் Roof. E.B.Box-கள் அமைக்கப்பட்டு பின்னர் இன்று 04.12.2024 EB Transform-மும் அமைக்கப்பட்டுள்ளது. இதுபோல் ஆக்கிரமித்து E.B. Transform அமைத்தால் அருகில் உள்ள பள்ளியில் படிக்கும் குழந்தைகள் மற்றும் பாதசாரிகள் நடுசாலையில் நடந்து விபத்துகளும் உயிர் பலிகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. மேலும் தண்ணீர் லாரிகள் அடிக்கடி இத்தெருவில் செல்லும். சாலையில் நீட்டி கொண்டிருக்கும் Roof மற்றும் EB Transformer மீது இடித்து விபத்துக்கள் நேரிட அதிக வாய்ப்புகள் உள்ளது. தனியார் கட்டிடத்திற்குள் EB Transformer-ஐ அமைக்காமல் EB அதிகாரிகள் கையூட்டு பெற்றுக் கொண்டு இதுபோல் Transformer கள் அமைத்து வருகிறார்கள். 10000 சதுரடியில் நான்கு தளம் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் கட்டும் நிறுவனம் அக்கட்டிடத்தின் வளாகத்திற்குள்தான் அக்கட்டிடத்திற்கான EB Transformer-ஐ அமைக்க வேண்டும் என்ற

விதி உள்ளது. ஆனால் மாநகராட்சி அலுலர்களுக்கு கையூட்டு கொடுத்துவிட்டு அனுமதி பெறுவதில்லை.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள கட்டிடத்தில் முன் ஆக்கிரமிப்பு செய்து அமைத்துள்ள EB Transformer-ஐ அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவிப் பொறியாளர் 15.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–94, சூளைமேடு, பஜனைக் கோவில் 2வது தெருவில் இருந்த பழைய மின்மாற்றி (Transformer) குடியிருப்புவாசிகள் கோரியபடி புதியதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என கள ஆய்வில் கண்டறியப்பட்டது. இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மின்சார வாரியத்தால் தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. மின்மாற்றி (Transformer) மின்வாரியத்தின் உரிமையாகும். மனுதாரர் புகார் கடிதம் மீது மேல் நடவடிக்கைக்கு 08.02.2025 அன்று தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மின்மாற்றி (Transformer) அகற்றும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்தை சார்ந்தது என்ற விவரம் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.''

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை, உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், பஜனை கோயில் 2–வது தெருவில் சுமார் 15,000 சதுரடி கொண்ட கட்டிடத்தை இடித்து தளம் ஒன்றுக்கு 15,000 சதுரடி என 4 தளத்தில் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு, பணிமுடியும் தருவாயில் இக்கட்டிடத்திற்கு முன் உள்ள பொதுசாலையை ஆக்கிரமித்து Concrete தூண் Roof. E.B.Box-கள் அமைக்கப்பட்டு EB Transform-மும் அமைக்கப்பட்டது என்பதும், இவ்வாறு பொது சாலையை ஆக்கிரமித்து E.B. Transform அமைத்ததால் அருகில் உள்ள பள்ளியில் படிக்கும் குழந்தைகள் மற்றும் பாதசாரிகள் நடுசாலையில் நடந்து விபத்துகளும் உயிர் பலிகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது என்பதும், தண்ணீர் லாரிகள் அடிக்கடி இத்தெருவில் செல்வதால், சாலையில் நீட்டி கொண்டிருக்கும் Roof மற்றும் EB Transformer மீது இடித்து விபத்துக்கள் நேரிட அதிக வாய்ப்புகள் உள்ளது என்பதும், 10000 சதுர அடியில் அடுக்குமாடி கட்டிடம் கட்டும் நிறுவனம் கட்டிடத்திற்குள் EB Transformer-ஐ அமைக்காமல் அக்கட்டிடத்தின் முன் உள்ள பொது சாலையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டதை அகற்றுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–94, சூளைமேடு, பஜனைக் கோவில் 2வது தெருவில் இருந்த பழைய மின்மாற்றி (Transformer) குடியிருப்புவாசிகள் கோரியபடி புதியதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது எனவும், இதுகுறித்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மின்சார வாரியத்தால் தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்பதும், மின்மாற்றி (Transformer) அமைப்பது மின்வாரியத்தின் உரிமை என்பதால், மனுதாரரின் புகார் கடிதம் மீது மேல் நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது என்பதும், மின்மாற்றி (Transformer) அகற்றும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்தை சார்ந்தது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள, சென்னை–94, சூளைமேடு, பஜனைக் கோவில் 2வது தெருவில் இருந்த பழைய மின்மாற்றியினை (Transformer) குடியிருப்புவாசிகள் கோரியபடி தமிழ்நாடு மின்சார வாரியத்தால் புதியதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதை பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் அலுவலர்களின் கள ஆய்வில் கண்டறியப்பட்டதும், மின்மாற்றி (Transformer) அமைப்பது மின்வாரியத்தை சார்ந்ததால், மனுதாரரின் புகார் கடிதம் மீது மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் இணைந்து மேற்கண்ட மின்மாற்றியை பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் பாதுகாப்பாக, உரிய விதிகளின்படி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர்,
சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 4, 4–வது குறுக்கு தெரு,
லேக் வியூ ரோடு,
சென்னை–600 034.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

1/6/26
செயலாளர்.
1.6.26